# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 82/2022 | **CNR No.** | : | TNKI13-000085-2022 |
| **Name** | : | சின்னதம்பி (எ) சின்னாசமி | **Father's Name** | : | கரியபோயன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 65 | **Village** | : | சின்னகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 3:33 PM | **End Time** | : | 3:57 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 05.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

(1) ராஜிகிருஷ்ணன் இடம் இருந்து 1ம் பிரதிவாதி சரவணன் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நத்தம் பழைய **சர்வே எண் 38/3** தற்போது புதிய **சர்வே எண். 84/3 ல் 118 ச. மீ** தான் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. **சர்வே எண்.84/3** ல் ராஜிகிருஷ்ணன் பெயரில் ஏற்பட்ட பட்டா சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் உரிமையும் இல்லை என்றால் சரிதான், ராஜிகிருஷ்ணன் யார் என்று எனக்கு தெரியாது.

(2) **சர்வே எண்.38/3** ஆனது வழியுடன் சேர்ந்து 32 பட்டாக்கள் மற்றும் காலி இடங்கள் சேர்ந்தது தான் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் **சர்வே எண்.38/3** ல் எனக்கு எந்த இடமும் ஒதுக்கப்படவில்லை என்றும் எனது பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்கள் இல்லை என்றால்

சரியல்ல. நத்தம், சிட்டா, பட்டா ஆகியவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கு கொடுக்கவில்லை.

(3) 1ம் பிரதிவாதி சரவணன் கிரையம் பெற்ற சொத்துக்கும் **வா.சா.ஆ.2, 3** ஆகியவற்றிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. கிரைய தேதியில் இருந்து கிரையம் பெற்ற சொத்தில் 1ம் பிரதிவாதி தான் ஓட்டு வீட்டில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கு பக்கத்தில் **சர்வே எண்.84/2 மற்றும் சர்வே எண்.84/4** உள்ளது என்றும் கிழக்கு பக்கத்தில் **சர்வே எண்.84/7** உள்ளது என்றும் மேற்கு பக்கத்தில் **சர்வே எண்.38/1ஏ** மற்றும் தெற்கு பக்கத்தில் **சர்வே எண்.38/5 ஏ** உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் **சர்வே எண்.38/3** என்ற சொத்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு அருகாமையில் இல்லை என்றால் சரியல்ல.

(4) **சர்வேஎண்.38/3** சொத்திற்கு செக்குபந்தி விவரம் என்னவென்றால் கிழக்கில் முருகன் வீடு, வடக்கில் சரவணன் வீடு, மேற்கில் பொதுபணிதுறை வாய்க்கால், தெற்கில் சின்னாசமி என்ற முருகன் வீடு ஆகும். எனது வழக்குரையில் மேற்படி செக்குபந்தி விவரம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ராஜிகிருஷ்ணன் இடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டார் என்பதனால் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. அவர் கிரையம் வாங்கிய சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். அதனால் எனக்கு நான் கோரியுள்ளது போல் விளம்புகை பரிகாரம் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் ஆவணத்திற்கும் சம்பந்தம்

இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகள் செலவு தொகை நஷ்ட ஈடு தொகையுடன் வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(5) ராஜிகிருஷ்ணன் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் இல்லை. ராஜிகிருஷ்ணன் பெயரில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **சர்வே எண்.84/3** சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. **சர்வே எ ண்.84/3** சொத்துக்கு அவர் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் இருந்ததால் தான் அவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கும் 5 ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த சொத்திற்கும் கிரையம் பெற்ற சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ராஜிகிருஷ்ணன் கிரையம் பெற்ற சொத்திற்கும் **வா.சா.ஆ.8** ல் கண்டுள்ள சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகளுக்கும் ராஜிகிருஷ்ணன் கிரையம் கொடுத்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் வழக்கில் கோரியுள்ளவாறு கிரைய பத்திரத்தில் விளம்புகை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதிக்கு இடையூறு கொடுக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு செலவு தொகை மற்றும் நஷ்ட ஈடு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-

District Munsif
Uthangarai